بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**Friday Sermon/வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா 24 March 2017**

**(24 Jamad'ul Aakhir 1438 AH)**

# THE PROMISED MESSIAH(AS)/வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்வுதும் சூரா.ஃ.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

## PROMISED MESSIAH DAY/ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினம்

மார்ச் 23-ம் தேதியின் சிறப்பு என்னவென்று உங்கள் அனைவருக்கும் மிக நன்கு தெரியும். உலகெங்குமுள்ள அஹ்மதி முஸ்லீம்கள் இத்தினத்தை மிக சிறப்புமிக்க ஒரு தினமாக கொண்டாடுகின்றனர். அது, மனித வரலாற்றில் மிக உன்னதமான ஒரு ஆன்மீக தலைவராக திகழும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்கள் தனது தோழர்களிடமிருந்து பக்தி வாய்ந்த உறுதிமொழி (பை-அத்) வாங்கிய தினமாகும். அல்லாஹ்விடமிருந்து மேலும் மேலும் கிடைத்த வெளிப்பாடுகளையொட்டி 1889-ம் ஆண்டு அந்த மஹாத்மா வரலாற்று மிக்க பை-அத்திற்கு ஆரம்பம் குறித்தார்.



அதன் வாயிலாக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் இஸ்லாமதத்தை சார்ந்த அஹ்மதியா அமைப்பிற்கு துவக்கமிட்டார். தம் வாழ்க்கையில் எஞ்சிய காலம் முழுவதும் அன்னார் மக்களை அல்லாஹ்வின் பால் அழைப்பதற்காகவே செலவிட்டார். அல்லாஹ்விடமிருந்து அன்னார் பெற்ற வெளிப்பாடுகளையாவும் உலக மக்களுக்கு முன் எடுத்துரைத்தார்.

## THE FAMILY BACKGROUND OF THE PROMISED MESSIAH (AS)

### வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)மின் குடும்ப பின்னணி

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பேர்ஷியன் கோத்திரத்தில் உட்பட்ட "பார்லாஸ்"(Barlas) என்ற மிக பிரபலமான பிரிவினை சார்ந்தவர். அன்னாரின் முன்னோர்களில் ஒருவராகிய மிர்ஸா ஹாதிபேஹ் அவர்கள் A.D 1530-ம் ஆண்டில் "சமர்க்கந்து"(Samarkand) எனும் தம் தாய்நாட்டிலிருந்து இந்தியாவில் வந்தடைந்தார். அன்னார் மிக கண்ணியம் வாய்ந்த ஒருவராகயிருந்தார். மட்டுமின்றி அன்னார் ஒரு பண்டிதராகவும் ஆன்மீக தலைவராகவும் இருந்தார். இந்தியா அன்று முகலாய அரசர் பாபரின்(Babar) ஆட்சியின் கீழாகயிருந்தது.

மிர்ஸா ஹாதிபேஹிற்கு அன்றைய அரசர் மக்கள் குடியேற்றமில்லாத ஒரு பகுதியை வழங்கினார். அப்பகுதியில் அன்னாரும் அன்னாரின் கோத்திரவும் வசித்துக் கொண்டனர். இந்த பகுதி லாகோறிலிருந்து(Lahore) சுமார் 70 மைல் தொலைவில் வடக்கு மேற்கான ஒரு இடமாகயிருந்தது. அன்னார் அமைத்த அந்நகரத்திற்கு **"இஸ்லாம் பூர்" என பெயர் சூட்டிக்கொண்டார். அன்னார் அந்நகரத்தின் ஆட்சியாளராகவும் முக்கியமான "காசி"யாகவும் திகழ்ந்தார். காலங்கள் சென்றடைந்த போது "இஸ்லாம் பூரில் பல்வேறு பரிணாமங்கள் உருவாகின. பின்னர் "இஸ்லாம் பூர்" என்ற பெயர் "இஸ்லாம் பூர்காதி" என்றும் அதை தொடர்ந்து "காதி" என்றும் முடிவில் "காதியான்" என்றும் அந்நகரம் அறியப்பட்டது.**

"மிர்ஸா குல் முஹம்மது"(Mirza Gul Muhammad) என்பவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் முப்பாட்டனார் ஆவார். அன்னார் இறையச்சமுடையவரும் நேர்மையாளரும் மிக பிரபலமானவரும் ஆவார். அன்னாரின் புதல்வனாகிய "மிர்ஸா அத்தா முஹம்மது"(Mirza Ataa Muhammad) என்பவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பாட்டனார் ஆவார். அன்னாரின் மகன் மிர்ஸா குலாம் முர்த்தசா (Mirza Ghulam Murtaza) சாஹிபினுடையவும் அன்னாரின் மனைவி சிராஹ் பீவி (Chiragh Bibi) சாஹிபாவுடையவும் மகனாக ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பிறவி கொண்டார்.

## THE BLESSED BIRTH & EARLY DAY

### அருளுக்குரிய பிறப்பும் ஆரம்ப கால வாழ்க்கையும்

A.D 1835 பிப்ரவரி 13-ம் தேதி (14 ஷவ்வால் 1250 AH) வெள்ளிக்கிழமை விடியற்காலையில் அன்னார் பிறந்தார். அன்னாரின் கூடவே மற்றொரு பெண்

குழந்தையும் பிறந்தது. அன்னாரின் சகோதரியான அப்பெண் குழந்தைக்கு "ஜன்னத்"(Jannat) என பெயர் சூட்டப்பபட்டது. ஆனால் அக்குழந்தை மிக தாமதமாகாமல் வபாத்தாகியது. "இந்த இரட்டைக்குழந்தைகளின் பிறப்பு" என்பது இஸ்லாமிக சாகித்தியங்களில் நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இடம்பெற்றிருந்த ஒரு தீர்க்க தரிசனத்தின் விடியலாகும். அதாவது **"வாக்களிக்கப்பட்ட மஹ்தி (சீர்திருத்தாளர்) இரட்டை குழந்தைகளில் ஒருவராக பிறப்பார்"** (புசூஸ்-அல் ஹிக்கம் முஹைத்தீன் இப்னு அறபி)

அடிப்படையற்ற விஷயங்களில் ஈடுபட்டுக் கொள்ள சிறுவயதிலிருந்தே அன்னார் விரும்பவில்லை. இவ்விஷயங்களில் அன்னார் தம் சக மாணவர்களிடமிருந்து விலகி நின்றார். அடிப்படை கல்வி பயின்றது குடும்பத்தில் இருந்தேயாகும். அத்தோடு ஒன்றுக்கு பின் மற்றொன்று என்ற வகையில் மூன்று ஆசிரியர்களிடமிருந்து (பசல் இலாஹி, பசல் அஹமது, குல் அலிஷா) அன்னார் ஆரம்ப கல்வி கற்றார்.

## HIS FIRST MARRIAGE

### அன்னாரின் முதல் திருமணம்

அன்னாரின் 15-ம் வயதில் முதல் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் குர்மத் பீவி(Hurmat Bibi). அத்தம்பதியருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. மிர்ஸா பசல் அஹ்மதும், மிர்ஸா சுல்தான் அஹ்மதும். மிர்ஸா பசல் அஹமது சாஹிப் 50 வயதாகும் பொழுது மரணமடைந்துவிட்டார். ஆனால் ஹஸ்ரத் சுல்த்தான் அஹ்மது சாஹிப் நீண்ட காலம் வாழ்ந்திருந்தார். மட்டுமின்றி **அன்னாரின் இளைய சகோதரனாகிய வாக்களிக்கப்பட்ட மகன் மிர்ஸா பசீருத்தீன் மொஹ்மூத் அஹ்மது (ரலி)வின் கரங்களில் பை-அத் செய்துக் கொள்ளவும் செய்தார்.**

## HIS ATTACHMENT TO PRAYER & MEDITATION

### தியானமும் பிரார்த்தனையின் மீதான அன்னாரின் விருப்பமும்

தனிமையாகயிருப்பது மிக விலை வாய்ந்த விஷயமென்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எண்ணியிருந்தார். அதிக நேரமும் அன்னார் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். அல்லது குர்-ஆன் படித்துக் கொள்வதில்(ஆய்வு) மூழ்கியிருந்தார்.

தம் மகனைக் குறித்து அத்தந்தை முற்றிலும் கவனமுடையவராகயிருந்தார். மத விஷயங்களின்பால் தம் மகன் அதிக விருப்பம் காட்டுவதைக் குறித்து அன்னார் உணர்ந்திருந்தார். ஆனால் தந்தை என்ற நிலையில் மகனின் அனுதின விஷயங்களில் அவர் தீவிர எண்ணமுடையவராகயிருந்தார். தம் மகனைக் குறித்து தம் நண்பர்களிடத்தில் அன்னார் சாதாரணமாக கூறியிருந்தார். அதாவது இந்த மகன் ஒரு "மஸீதர் ஆகிவிடுவான். (பஞ்சாபி மொழியில் மஸீதர் என்றால் அதிக நேரமும் பள்ளி வாசலில் பிரார்த்தனையில் மூழ்கியிருப்பவர் என்று பொருள்) அவன் எந்த

வேலையும் தேடிக்கொள்வதில்லை. அவனின் சுய தேவைக்காக எதாவது சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமுமில்லை.

## VISION OF THE HOLY PROPHET MUHAMMAD (PBUH)

### தூய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், அன்னாரின் கனவில் காட்சியளிக்கின்றார்

முப்பதோ அல்லது முப்பத்தி ஒன்றோ வயதாகயிருக்கும் பொழுது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்கள், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை கனவில் தரிசித்தார். பரிசுத்த தூதர் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவிற்கு உரிய அன்பை அன்னார் வைத்திருந்தார் என்பதற்கு ஆற்றல் மிக்க அத்தாட்சியாகும் இத்தரிசனம். மற்றனைவர்களிடமிருந்தும் விலகி நிற்க அன்னார் விரும்பினார். இந்நிகழ்வுகள்யாவும் அன்னாரின் மகத்தான ஆன்மீக எதிர்காலத்தை சுட்டிக்காட்டும் தீர்க்க தரிசனமாகயிருந்தது.

1868-ம் ஆண்டு அல்லது 1869-ம் ஆண்டு "பட்டால"யில் (Batala) நடைபெற்ற ஒரு மதசம்பந்தமான வாத-எதிர்வாதத்தில் "முஹம்மது ஹுசைன் பட்டாலவி"க்கு எதிராக பங்கேற்க அன்னார் மறுத்துக் கொண்டார். காரணம் கருத்துவேறுபாடு வைத்திருக்கும் சிலர்களின் ஒரு வாதத்திற்கு மட்டுமாக வாதம் செய்வதை அன்னார் விரும்பவில்லை. இவ்வகையான வாத-எதிர்வாதங்களில் பங்கேற்பதன் வாயிலாக பெருமையடைய அன்னார் விரும்பவில்லை. மாறாக அல்லாஹ்வின் அங்கீகாரத்தின் மீதும் அவனது மகிழ்ச்சியின் மீதும் மட்டுமே அன்னார் விரும்பம் வைத்திருந்தார். மௌலவி முஹம்மது ஹுசைன் பட்டாலவிக்கு எதிராக அந்த வாத-எதிர்வாதத்தில் பங்கேற்பதற்கு மக்கள் வற்ப்புறுத்தியிருந்தும் அன்னார் அதற்கு தயாராகவில்லை. **"பரிசுத்த குர்ஆனுக்கு முதல் இடம் வழங்கிக் கொள்ள வேண்டும்" "நபிமொழிகளுக்கு இரண்டாவது இடம் அளிக்க வேண்டும்"** என்பதே அன்னாரின் தீர்மானமாகயிருந்தது. அவரின் இந்த சரியான நோக்கத்திற்கு அல்லாஹ் மிக அதிகம் மகிழ்ச்சியை தெரிவித்தான். அன்றைய நாள் இரவில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) மிற்கு உர்து மொழியில் ஒரு வெளிப்பாடு கிடைத்தது. அதன் மொழியாக்கம் இவ்வாறாகும். **"உம் இந்த செயல்களில் அல்லாஹ் மிக திருப்தியுடையவனாக இருக்கின்றான். மாபெரும் அருள் கொடைகள் உம்மீது பொழிந்துவிடும். அரசர்கள் உம் ஆடைகளிலிருந்து அருளைப் பெற்றுக் கொள்வார்கள்"**

## DEMISE OF HIS FATHER & DIVINE REASSURANCE

### தந்தையாரின் வபாத்தும், திடமான இறை நம்பிக்கையும்

1876 ஜுன் மாதம் ஒரு மாலை நேரத்திற்கு பின் அன்னாரின் தந்தையார் காலமானார். அந்நாள் மதியம் அன்னார் இறைவனிடமிருந்து ஒரு வெளிப்பாடை பெற்றுக்கொண்டார். அன்னாரின் தந்தையாரின் வபாத்தைக் குறித்து எண்ணி வேதனைக்குரிய நிலையில் தம் அடைக்கலம் இழந்து விட்டது என்று

கவலையில் மூழ்கினார். தம் தந்தையாரிடமிருந்து அருந்திக் கொண்டிருந்த சம்பத்தின் ஊற்று வற்றிக் கொண்டது என்றும், இனி தாம் எதிர்கொள்ளப்போவது வேதனைகளுடையவும் வறுமையுடையவும் நாட்கள் என்றும் எண்ணி சிந்தனைகளுக்கு கீழ்படிந்து கொள்ளும் சூழ்நிலையில் அல்லாஹ்விடமிருந்து வேறொரு வெளிப்பாடு கிடைத்தது. அது குர்ஆனிலிருந்துள்ள(39 : 37)
ஒரு வசனமாகும். சுருங்கிய வார்த்தைகளைக் கொண்டு கூறினால்

**"அல்லாஹ்வே அவனுடைய அடியாருக்குப் போதுமானவனல்லவா?"**

**("Is Allah not sufficient for His Servant?")**

இந்த இறைவெளிப்பாடு அன்னாருக்கு மிக அதிகமான அளவிற்கு ஆறுதலை அளித்தது. அன்னாரின் மனம் அமைதியை அடைந்தது. அந்த இறைவெளிப்பாடுகள் வாயிலாக அன்னாரின் விஷயங்கள் அனைத்தும் அல்லாஹ் ஏற்றெடுத்து கொண்டுள்ளான் என்றும் தம் மனகலக்கங்களிலிருந்துள்ள மீட்சி அல்லாஹ்வின் கரங்களில் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## APPOINTMENT AS MUJADDID

### முஜத்தீத் நியமனம்

A.D. 1882-ம் ஆண்டு பரிசுத்த நபி முஹம்மது(ஸல்) அவர்கள் ஒரு தரிசனத்தில் அன்னாருக்கு வெளிப்பட்டார். அந்நேரம் அல்லாஹ்விடமிருந்து முதல் வெளிப்பாடு வசனம் கிடைத்தது. அது, **"உம்மை முஜத்தீதாக நியமித்துள்ளான்"** என்ற வெளிப்பாடாக இருந்தது.

## DIVINELY-GUIDED MARRIAGE

### இறை வேண்டுகோளின் அடிப்படையிலான திருமணம்

அன்னார் பெற்ற இறை வெளிப்பாடுகளின் அடிப்படையில் 1884 நவம்பர் மாதம் 17-ம் தேதி டெல்லியை சார்ந்த மிர் நாசிர் நவாப் சாஹிபின் புதல்வி ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பீஹம்(ரலி) சாஹிபாவை திருமணம் செய்துக் கொண்டார்.

## PUBLIC ANNOUNCEMENT OF HIS SPIRITUAL MINISTRY

### அன்னாரின் ஆன்மீக நியமனத்தின் விளம்பரம்

1885-ம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு பொது விளம்பரம் வாயிலாக பிரபலர்களாகிய எல்லா மதத்தலைவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் உலக அரசர்களுக்கும் அல்லாஹ்வில் நின்று தாம் பெற்ற இறை வெளிப்பாடுகளின் அடிப்படையில் அன்னார் அழைப்பு விடுத்தார். அதாவது இக்கால கட்டத்தின் சீர்திருத்தாளர் நான் என்றும், மர்யமின் மகன் ஈசா(அலை)மின் சாயயில்(ஆன்மீக பதவியில்) நான் தோன்றியிருக்கின்றேன் என்றும் அன்னார் அறிவித்தார்.

மட்டுமின்றி இந்த விளம்பரத்தை ஒரு அழைப்பிதழாக கண்டு அனைவர்களும் காதியானில் வந்து தன்னை நேரடியாக சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளவும் செய்தார். அத்தோடு தம் உரிமை கோருதலுக்கு (இக்காலகட்டத்தின் சீர்திருத்தாளர்) அடிப்படையான இறையடையாளங்களை நேரடியாக தரிசித்து உணர்ந்துக் கொள்ளவும் அன்னார் கேட்டுக் கொண்டார்.

## HIS CHILDREN FROM HIS SECOND WIFE

### அன்னாரின் இரண்டாவது மனைவியிலிருந்துள்ள புதல்வ-புதல்விகள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)மின் இரண்டாம் மனைவி ஹஸ்ரத் செய்தா: நுஸ்ரத் ஜஹான்பீகம்(ரலி) சாஹிபாவிலிருந்து அன்னாருக்கு 10 குழந்தைகள் இருந்தன. அவர்கள் வாயிலாக ஏராளமான தீர்க்க தரிசனங்கள் நிறைவடைந்ததுண்டு. அவர்களில் 5 பேர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாகயிருந்தனர். அவர்களின் பெயர் வகைகள் கீழ்வருமாறாகும்.

1. ஹஸ்ரத் மிர்ஸா பசீறுத்தீன் மஹ்மூத் அஹ்மது(ரலி). அன்னார் வாக்களிக்கப்பட்ட புதல்வனும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளராகவும் (Muslih Ma’ud) இருந்தார். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இரண்டாம் பின்தொடர்காரராகவும் (Second Successor) திகழ்ந்தவர். அன்னார் 1889 ஜனுவரி 12-ம் தேதி பிறந்தார். 1965 நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்னார் வபாத்தானார்.
2. ஹஸ்ரத் மிர்ஸா பசீர் அஹ்மது(ரலி). அன்னார் 1893 ஏப்ரல் மாதம் 20-ம் தேதி பிறந்தார். 1963 செப்டம்பர் மாதம் 2-ம் தேதி காலமானார்.
3. ஹஸ்ரத் மிர்ஸா ஷரீப் அஹ்மது(ரலி) அவர்கள். அன்னார் 1895 மே மாதம் 24-ம் தேதி பிறந்தார். 1961 டிசம்பர் மாதம் 26-ம் தேதி மறைந்தார்.
4. ஹஸ்ரத் செய்தா நவாப் முபாரக்கா பீஹம்(ரலி) அவர் 1897 மார்ச் மாதம் 2-ம் தேதி பிறந்தார். 1977 மே மாதம் 23-ம் தேதி இயற்கை எய்தினார்.
5. ஹஸ்ரத் செய்தா: நவாப் அமத்துல் ஹாபிசா(ரலி). அவர் 1904 ஜூன் மாதம் 25-ம் தேதி பிறந்தார். 1987 மே மாதம் 06-ம் தேதி மரணித்தார்.

## BAI’AT (OATH OF ALLEGIANCE)

### பை-அத் (பக்தி வாய்ந்த உறுதிமொழி)

பை-அத் அதாவது பக்தி வாய்ந்த உறுதிமொழி 1889 மார்ச் மாதம் நடைபெற்றிருந்தது என நான் உங்களிடம் முதலில் கூறியிருந்தேன். முதல் பை-அத் “லுதியானாவில்” ஹஸ்ரத் சூபி அஹமது ஜான் சாஹிபின் மனைக்குள் வைத்து நடைபெற்றது. அஹ்மதிய முஸ்லீம் அமைப்பில் நுழைந்து விட்ட முதல் நபர் பேறவையை சார்ந்த ஹஸ்ரத் மௌலவி நூறுத்தீன்(ரலி) ஆகயிருந்தார். பின்னர் அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் முதல் கலீ∴பாவாகவும் ஆனார்.

## NEARING HIS EARTHLY JOURNEY & MISSION

### இவ்வுலக பயணத்தினுடையவும் ரிசாலத்தினுடையவும் இறுதி கட்டம்

அன்னாரின் மனைவியின் வேண்டுகோள்படி 1908 ஏப்ரல் மாதம் 29-ம் தேதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) லாகோரில் வந்தடைந்தார். 1908 மே மாதம் 09 ம் தேதி அரபி மொழியில் அன்னாருக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது. அதன் பொருள் “உடல் தியாகம்” மேலும் “மரணம்” உம் அனைத்து சுமைகளுக்கும் அல்லாஹ் போதுமானவன். இந்த வெளிப்பாடு வாயிலாக உம் மரண நேரம் நெருங்கி விட்டது என அல்லாஹ் அறிவித்தான். 1908 மே மாதம் 17-ம் தேதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் தம் விருப்பப்படி லாஹோரை சார்ந்த தலைவர்களையும் பிரபலமான மற்று நபர்களையும் ஒரு விருந்துக்காக அழைத்தார். அங்கு வருகை தந்த மக்களின் விருப்பப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் உணவுக்கு முன்னதாகவே கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் உரையாற்றினார். அந்த உரையில் அன்னாரின் வாதங்களையும் போதனைகளையும் குறித்து மிக விரிவாக விளக்கினார். மட்டுமின்றி அன்னாருக்கும் அன்னாரின் ஜமா அத்திற்கும் எதிராக பகைவர்கள் எழுப்பியிருந்த அனைத்து வித அவதூறுகளுக்கும் மிக விளக்கமாகவும் அவர்கள் நன்கு உணரும் வகையிலும் பதிலளித்தார்.

மக்களுக்காக ஒரு பொது பிரசங்கம் செய்ய வேண்டும் என சில நபர்களின் வேண்டுகோளை முன்வைத்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அதற்கு முன் வந்தார். அதற்காக ஒரு கட்டுரையும் தயார் செய்தார். “பைஹாமே சுல்ஹ்” (சமாதான தூது) என்ற பெயரில் அக்கட்டுரை சிறப்பு பெற்றதாகும். இந்தியாவை சார்ந்த முஸ்லீம்களும் ஹிந்துக்களும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே அக்கட்டுரையின் அடிப்படையாகயிருந்தது. இக்கட்டுரையினை எழுதிக்கொள்ளும் வேளையில் அதாவது 1908 மே மாதம் 20-ம் தேதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மற்றொரு வெளிப்பாடு அரபி மொழியில் கிடைத்தது. “உடல் தியாகம்” அதாவது உம் மரணம் அருகாமையை எட்டியிருக்கின்றது என சுருக்கம்.

என்றிருந்தும் அன்னார் தம் வேலையினை தொடர்ந்தார். அக்கட்டுரையை எழுதி முழுமைப்படுத்தினார். 1908 மே மாதம் 25-ம் தேதி மதியத்திற்கு பின் அக்கட்டுரையினை அச்சிட்டு வெளியிட்டுக் கொள்வதற்கு வழங்கினார். அஸர் தொழுகைக்கு பின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை), அவர்கள் ஈசா நபி(அலை) மின் மரணத்தைக் குறித்து ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து அன்னாரின் அனுதின சவாரிக்காக வெளியே சென்றார்.

அன்றைய தினம் மாலை “மஹ்ரீப்” மற்றும் “இஷா” தொழுகைக்கு பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் சாதாரணமாக தூங்கிக் கொள்ளும் நேரத்திற்கு தூங்க சென்றார். இரவு 11 மணியளவில் அன்னாருக்கு வயிற்றுப் போக்கு அனுபவப்பட்டது.

உங்களுக்கு நன்கு தெரிந்ததுப் போன்றே தீவிரமனமுடைய "முல்லாக்கள்" முற்றிலும் தவறான நிலையில் அன்னாரை ஆட்சேபிப்பதுண்டு. அதாவது அன்னார் கழிவறையில் வீழ்ந்து இறந்தார் என்று! (இறைவன் மன்னிப்பானாக) இவ்வாறு அன்னாரை தனிப்பட்ட நிலையில் ஆட்சேபித்துக் கொண்டனர். இது நம்மை சிந்திக்க வைப்பது என்னவென்றால் அதாவது நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்) மீது முஸ்லீமல்லாதவர்கள் கூறிய அவதூறுகள் நூற்றாண்டுகளுக்கு பிறகும் நிலைநின்று வருகின்றது. இப்போதும் முஸ்லீம்கள் குறிப்பாக முல்லாக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹிக்கு எதிராக பகைமையுடையவும் வெறுப்பினுடையவும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அன்னாருக்கு வயிற்றுபோக்கு நிகழ்ந்தது என்பது உண்மையாகயிருக்க அவர்கள் அதற்கு முற்றிலும் மாறாக அன்னார் கழுவறையில் இறந்தார் என்று பொய் பிரச்சாரம் நடத்துகின்றனர். அவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கு உங்களில் எவராவது ஒருவர் சாட்சியாகயிருந்தீர்களா? ஒருவேளை இது உண்மை என்று வந்தால் கூட அதொரு சாபதிற்குரிய மரணம் என எப்படி கூற முடியும்? மரணித்தவர்களை மறைத்து கொள்வதற்கு முன்னதாக குளிப்பாட்டிக் கொள்வதைப் பற்றி முஸ்லீம்கள் என்ன நினைக்கின்றார்கள்? மரணித்த உடலை நாம் கவனத்துடன் ஆதரவோடு குளிப்பாட்டிக் கொள்கின்றோம். அந்நேரம் தேவைப்பட்டதெல்லாம் நாம் செய்கின்றோம். (சுத்தம் செய்கின்றோம்) அதாவது அவனது / அவளது வயிற்றினை நாம் மெல்ல தடவ வேண்டும். நடைமுறைப்படி உடம்பில் இருக்கும் அசுத்தமானவற்றை வெளியேற்றி சுத்தம் செய்வதே இச்செயலின் நோக்கம். இந்த தீவிர குணமுடைய முல்லாக்களின் நோக்கத்தில் வயிற்றுபோக்கு காரணம் மரணிப்பது சாபத்திற்குரிய மரணம் என்றால், மய்யத்து குளிப்பாட்டும் பொழுது இறந்த ஒவ்வொரு உடம்பிலிருந்தும் வெளியேற்றிக் கொள்ளும் கழிவு பொருட்களைக் குறித்து இவர்கள் என்ன கூறுவார்கள்? இந்த கழிவு பொருட்களை வெளியேற்றும் பொழுது மரணித்த அந்நபர் சாபத்திற்குரியவன் அல்லது சாபத்திற்குரியவள் என இந்த முஸ்லீம்கள் கூறிக்கொள்வார்களா?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)மிற்கு மிக கடினமான காய்ச்சலாகயிருந்தது. இரவில் அன்னாருக்கு நினைவிழந்தும் திரும்ப வந்தும் இருந்தது. விடியற்காலை அன்னார் கேட்டார். தொழுகைக்கு நேரமாகியதா? அருகாமையில் இருந்த ஒருவர் "ஹூசூர் ஆம்" என பதிலளித்தார். அன்னார் தொழுகையை ஆரம்பித்தார். தொழுகையின் மத்தியில் அன்னாருக்கு மறுபடியும் நினைவிழந்தது. இங்கு நாம் கூறுகின்றோம். அன்னாரின் தொழுகை முழுமை பெற்றது என்று. இந்த தீவிரமனமுடைய முல்லாக்கள் என்ன தைரியம் கட்டிக்கொள்கின்றனர். அன்னார் கழுவறையில் இறந்தார் என்று கூறிக்கொள்ள! கழுவறையில் வைத்து எவராவது தொழுவார்களா? அல்லாஹ்வின் மாபெரும் அருள்களால் அன்னாரின் உயிர் அன்னாரின் உடலில் இருந்த நேரத்தில் தான் அனைத்து கழிவு பொருட்களும் வெளியேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதற்கு பின்தான் அன்னார் வபாத்தாகியது. மரணம் நெருங்கிய நேரத்திற்கு முன்னவே அல்லாஹ் அன்னாரின் உடலை சுத்தம் செய்து

கொண்டான். காலை 10 மணியளவிற்கு அன்னாரின் நிலைமை மோசமாகியது. 10-30 திற்கு நம் அன்புக்குரிய இமாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் வபாத்தானார்கள் "இன்னாலில்லாஹ் வ இன்னா இலைஹி ராஜுஊன்"

வபாத்தாகும் போது அன்னாருக்கு சந்திர வருட கணக்கு படி 75 வயதும் சூரிய வருட கணக்குப்படி 73 வயதிற்கு மேலாகவும் இருந்தது. **நம் அன்புக்குரிய இமாம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) மீது என்றென்றும் அல்லாஹ் அருள்கள் பொழிவானாக!**

அன்னார் இஸ்லாமின் மாபெரும் சீர்திருத்தாளராகயிருந்தார். களங்கமற்ற தம் தோழர்களுக்கு அன்னார் முற்றிலும் சிறந்த முன் மாதிரியாக திகழ்ந்தார். நிச்சயமாக இந்நூற்றாண்டில் இறையடையாளத்தின் வருகையோடு அதாவது ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் வருகையோடு அதன் முன்னேற்றத்திற்கு தடையிட எந்த சக்திக்கும் இயலாது. நிச்சயமாகவும் அல்லாஹ்வின் வாக்குறுதி என்றென்றும் உண்மையாகவே விடியலாகும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்


**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817